DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.44/2024**
Prosecution witness **PW.6 (LW.9)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Sivakumar | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(Personal appearance of A1 to A3 dispensed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **24.11.2025**

**24.11.2025 முதல் விசாரணை** :

1. நான் சேலாஸில் குடியிருந்து சேலாஸ் டவுனில் ராஜா ஸ்டோர் என்ற பெயரில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். வழக்கின் விவரம் எனக்கு தெரியும்.

2. 31.03.2015 ம் தேதி சேலாஸ் டவுனில் எனது கடைக்கு எதிர்புறமாக தி.க கட்சி காரர்கள் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். மாலை 6 மணிக்கு கூட்டம் நடந்து கொண்டிருந்த போது துரை சந்திரசேகர் என்பவர் இந்து மதத்தையும் அதன் சாமிகளை பற்றியும் மிக கேவலமாக பேசிக்கொண்டிருந்தார். கும்பாபிஷேகத்தை குறித்து பேசும் போது 3, 4 மணி நேரம் பூஜை செய்வார்கள் என்றும், அப்போது சிறுநீரை அடக்க முடியாமல் சொம்பில் அடைத்து வைத்துவிடுவார்கள் என்றும், கீழே வந்து பக்தர்களுக்கு அதை தீர்த்தமாக தெளிப்பார்கள் என்றும் பேசினார். அவ்வாறு அவர் பேசிக்கொண்டிருந்த போது மேடையில் கருணாகரன், நாகேந்திரன் மற்றும் 4, 5 பேர் இருந்தார்கள்.

3. அவ்வாறு பேசியதை கேட்டதும் அங்கிருந்த மக்கள் கொந்தளித்து மேடையை நோக்கி வந்தார்கள். அப்போது அ.சா.1 கிஷோர் மேடையிலிருந்த நிர்வாகிகளை பார்த்து கேட்ட போது நாகேந்திரன், கருணாகரன் ஆகியோர் ஒரு கட்டையை எடுத்து கிஷோரின் வலது பக்க தோள்பட்டையில் அடித்துவிட்டார்கள். அதில் கிஷோருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. அக்கம்பக்கம் இருந்தவர்கள் காயம்பட்ட கிஷோரை

மருத்துவமனைக்கு கூட்டி சென்றார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் இரண்டு நாள் கழித்து என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :–

1. எனது கடைக்கும் கூட்டம் நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 15 அடி தூரம் இருக்கும். சம்பவயிடத்தில் சுமார் 100 பொது மக்கள் இருந்தார்கள். அந்த பொதுகூட்ட மேடையை சுற்றி நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை எனது கடையில் வைத்து விசாரித்தார்கள். அ.சா.1 கிஷோர் என்ன புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. உண்மையில் நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், போலிசார் சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. அ.சா.1 கிஷோர் இந்து முன்னணி உறுப்பினர் என்றால் சரிதான். அவர் மீது நிறைய வழக்குகள் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. கிஷோர் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2025.11.24 14:50:44 +0530

Judicial Magistrate,
Coonoor.